DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.327 /2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-8 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பாஸ்கரன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed )
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 21.07.2026

---

**முதல் விசாரணை**

1. நான் காவல்துறை துணை கண்காணிப்பாளராக மதுரை மதுவிலக்கு அமலாக்கபிரிவில் பணியாற்றி விருப்ப ஓய்வில் இருந்து வருகிறேன். கடந்த 2022 ம் வருடம் ஆர்.எஸ்.மங்கல காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது கடந்த 26.09.2022 ம் தேதி 15.00 மணியளவில் இவ்வழக்கில் புகார்தாரர் பிரபாகரன் என்பவர் கொடுத்த புகார் மனுவை நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பாலுசாமி என்பவர் பதிவுசெய்து வைத்திருந்த மனு ரசீது எண் 273/22 என்ற

எண்ணுடைய புகாருடன் கூடிய மனுரசீதினை எனது விசாணைக்கு எடுத்துகொண்டு புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையை குற்றஎண். 231/22 u/s 341,294(b),506(ii),435 IPC யாக வழக்கு பதிவுசெய்தேன். முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

3.பின்னர் வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அதே நாள் 17.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சத்தியமூர்த்தி, சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **பார்வைமகசர் அ.சா.ஆ.7 ஆகவும்., மாதிரிவலைரபடம் அ.சா,ஆ.8 அகவும் குறியிடு செய்யப்படுகிறது.** சம்பவயிடத்திலிருந்து எறிந்த சேதப்பட்ட நிலையில் இருந்து TN 65 A 5330 என்ற எள்ணுள்ள இருசக்கரவாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சிதயார் செய்து கைப்பற்றினேன். அத்தாட்சி அ.சா,.ஆ.9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

4. பின்னர்வழக்கின் சாட்சிகளான பிரபாகரன், ஜெயமேரி, சேகர், அருள்சாமி,ஜோசப்மேரி, அந்தோணிசாமி, சத்தியமூர்த்தி மற்றும் சுரேஷ் ஆகியோர்களை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன். அவர்கள் விசாரணையிலும் சாட்சிகளை விசாரணை செய்ததிலும் குற்றசம்பவம் உண்மையனெ தெரியவந்து வழக்கில் ஈடுபட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் ராமநாதபுரம் மாவட்டஅமர்வு நீதிமன்ற முன்பிணையில் சென்றதாக தெரியவந்தது.

5. பின்னர் இவ்வழக்கில் சேதப்படுத்தப்பட்ட இருசக்கரவாகனத்தினை அளவீடுசெய்து சேத மதிப்பு சான்றிதழ் வழங்கிய அருண் பாண்டி என்பவரை விசாரணைசெய்து சேதமதிப்பு சான்று அவரது வாக்கமூலம் பதிவுசெய்துகொண்டேன். சேத மதிப்பு சான்று அ.சா.ஆ.10 ஆக குறியிடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் சேதப்படுத்தப்படட இருசக்கரவாகனம் எறிந்துவிட்டதால் சம்பவயிடத்திலேயே புகைப்படம் எடுத்தேன். சம்பவயிடத்திலிருநது எடுக்கப்பட்ட இருசக்கரவாகனத்தின் புகைப்படம் அ.சா,ஆ.11 ஆக குறியீடுசெய்யப்படுகிறது,.

5. பின்னர் எனது விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றஇறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவயிடமானது ஆர்எஸ்மங்கலம் காவல்நிலையத்திலிருந்து தெற்கு பக்கம் 6 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. எனது விசாரணையில் சம்பவம் தொடர்பாக அலைபேசி மூலம் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் அலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்படவில்லை. சம்பவயிடத்திற்கு நான் செல்வதற்கு முன் எங்கள் காவல்நிலைய காவலர்கள் யாராவது சென்றார்களா என்றால் இல்லை. 24ம் தேதி எங்கள் காவல்நியைத்தின் நிலைய பொறுப்பு அதிகரியாக நான் செயல்பட்டேன் என்றால் சரியல்ல. அன்றையதினம் எங்கள் காவல் நிலையத்தின் நிலைய பெறுப்பு அதிகாரியாக யார் செயல்பட்டார் என்றால் நான் தான்செயல்பட்டேன் ஆனால் வேறு அலுவல் பணியாக வெளியே சென்றிருந்தேன்.

2. புகார்மனுவில் புகார்தாரரின் கையொப்பத்திற்கு கீழ் தேதி இடம்பெறவில்லை என்றால் சரிதான். பொதுவாக நான் நிலையத்தில் இல்லாத சமயம் எங்கள் காவல் நிலையத்திற்கு புகார் வந்தால் அதை பற்றி அன்றையதினமே என்னிடம் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்கை காலம் 8ல் விவரங்கள் நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். புகாரானது காலதாமதமாக நிலையத்திற்கு கிடைக்க பெற்றதற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றால் புகார் கொடுக்க காலதாமதம் ஏற்படவில்லை. முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்வதற்கு ஏன் காலதாமதம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி சுரேஷ் முரளியும் புகார்தாரரும் கணவன் மனைவி என்றால் கணவன் மனைவியாக இருந்து விவாகரத்து செய்துவிட்டார்கள். விவாகரத்து உத்தரவை நான் பார்ககவில்லை என்றால் புகார்தாரர் உத்தரவை கொடுக்கவில்லை. விசாரணையில் புகார்தாரர் ஆர்எஸ் மங்கலத்தில் குடியிருந்து வருகிறார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான்.

3.முதல்தகவல்அறிக்கை 26.09.2022ம் தேதி 15மணிக்கு பதிவுசெய்யப்பட்டது. சம்பவயிடம் சென்று பார்வைமகசரை 26.09.2022 17 மணிக்கும் அத்தாட்சி, 26.09.2022ம் தேதி 17மணிக்கு தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

3 வது எதிரி கொடுத்த புகாரின்பேரில் புகார்தாரர் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி புகார்தாரர் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் நான் சரிவர விசாரிக்காமல் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றும் எதிரிகள் எந்த குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்றும் புகார்தாரர் அவரது வாகனத்தை அவரே தீவைத்து எறித்துவிட்டு எதிரிகள் மீது பொய் புகார்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 24 ம் தேதி புகார்தாரரின் அலைபேசியிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றும் அதன்பேரில் சம்பவயிடம் வந்த காவலர்கள் புகார்தாரரை எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. அதன்பின் பின்னிட்டு யோசித்து புகார்தாரர் அவரது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதனை சரிவர விசாரிக்காமல் நான் எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர விசாரிக்காமல் எதிரிகள் மீது குற்றஇறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல., வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்தேன் என்றால் சரியல்ல. எறிந்த பைக்கை புகார்தாரர் காவல்நிலையத்தில் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து எறிந்த வாகனத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.21 15:49:51 +0530

Judicial Magistrate,
Thiruvadanai.